(The heroine speaking in despair, in spite of the comforting, to the confidante, who has comforted her by saying: "It is not the season".)

[1] The Indian laburnum (*Cassia fistula*), here called *kaṭukkai*, but more commonly *koṉṟai*, is a typical tree of the *mullai* setting. It is said to bloom at the beginning of the rainy season (cf. TN 104, 109, 116, 120, AiAi 1, AiE 18, KārN 4).

[2] I have followed the OC in taking *vīyum* as a finite verb, which means that the poem contains two separate sentences, both of which have the laburnum trees as their logical subject. This is slightly akwards, because the poem thus begins with the end point ("are withering") of the process it describes (the blooming of the laburnum

trees). The OC reads the whole poem as one sentence (with *ām* replaced by the absolutive *āy*) and shifts *vīyum* (glossed with *aḻiyāniṉṟaṉa*) to the end. This induces NP (followed by Rāj.) to replace *ām* with *āy* in the root text.

[3] This poem contains a rather elaborate description of the blossoming of the laburnum trees in its successive stages (cf. a similar description of the blooming of the while glory lily in TN 119). The individual stages of the blossoming are compared to various objects, not all of which are immediately obvious: 1) molucca beans (*kaḻal*): refers to the closed buds; 2) golden dice (*poṉ vaṭṭu*): probably refers to slightly larger, unfolding buds (the laburnum flowers are yellow in colour); 3) garlands (*tār*): refers to the trailing flower clusters (cf. TN 109, 116); 4) palm leaves (?) (*maṭal*): the word usually means "palm stem" or "palm leaf", but here the OC glosses *itaḻ*, "petal" (thus also on TN 56); in either case, the point of the comparison is unclear; 5) women's hair (*kuḻal*, lit. "curls"): refers to the long, dark seedpods of the laburnum tree (cf. *Kuṟuntokai* 21); 6) hollow sticks (?): the OC takes *curi* as "hole" (*tuḷai*), a meaning that does not seem to be attested elsewhere, and inverts the logical order of the elements in the compound (i.e. "sticks with holes" or "hollow sticks"). This might refer to flutes (for flutes made from the seedpods of the laburnum tree, cf. *Naṟṟiṇai* 364, *Akanāṉūṟu* 54, *Kalittokai* 106, AiE 22, Kain. 30).

99. பொன்வாளாற் காடில் கருவரைபோழ் போர்த்தாலு
மென்வாளா வென்றி யிலங்கெயிற்றா—யென்வாள்போல்
வாளிழந்த கண்டோள் வனப்பிழந்த மெல்விரலு
நாளிழந்த வெண்மிக்கு நைந்து.

1c கருவரைபோழ் A_1, B; கருவரை Irā.*

1d போர்த்தாலு A_1, Irā.; போத்தாலு B

3a வாளிழந்த B, Irā.; வாளிழிந்த A_1

* The reading *karuvaraipōḻ*, is supported by both mss. Irā. omits the word *pōḻ*, perhaps because of the problems involved with interpretation (see the notes to the translation).

எ-து. இதுவும் அது.

பொன் போன்ற வெயில் ஒளியால் வெந்து[1] காடு இன்றியிருந்த[2] கரு வரைகள் கார்ப் பருவம் செய்து மலரிதழ்களான் மூடப்பட்டாலும் இதனால்[3] பயன் என்ன? பருவம் அன்று என்று சொல்லி வாளாநின்றாய்,[4] இலங்கெயிற்றையுடையாய்! என் மேனியின்-கண் உள்ள ஒளி போல ஒளி இழந்தன என் கண்களும். போய் இழந்த நாள்களின் எண்[5] மிகுதலான் எண்ணி என் விரல்களும் தேய என் தோள்களும் வனப்பு[6] இழந்தன என்றவாறு.

இதனுள் வாளா என்பது பயன் இன்மையைக் காட்டுவதோர் இடைச்சொல்.*

1 வெந்து B, Irā.; வந்து A_1

2 இன்றியிருந்த A_1, Irā.; இன்றி_ருந்த B

3 இதனால் A_1, B; அதனால் Irā.

4 வாளாநின்றாய் emend.; வாளாநின்றய் A_1; நின்றாய் B; வாளாநின்றி Irā.†

5 எண் A_1, Irā.; எண்ணம் B

6 வனப்பு A_1, Irā.; வனபு B

* The commentary is followed by an additional note stating: "Herein, *vāḷā* is a particle expressing uselesness".

† I propose the emendation *vāḷāniṉṟāy*, which takes into account both manuscrpt readings *vāḷāniṉṟay* in A_1 (where the ending is clearly misspelled) and *niṉrāy* in B (where *vāḷā* is ommitted). Irā.'s emendation *vāḷaniṉṟi* seems less likely.

பொன்	வாளால் / -ன்	காடு	இல்	கரு	வரை	போழ்	போர்த்தாலும்
poṉ	*vāḷāl / -ṉ*	*kāṭu*	*il*	*karu*	*varai*	*pōḻ*	*pōrttāl-um*
gold	brightness (instr.)	forest	not to be	black	mountain	tender leaf?	to cloack (cond.) + *um*

என்	வாளா	என்றி	இலங்கு	எயிற்றாய்	என்	வாள்	போல்
eṉ	*vāḷā*	*eṉṟi*	*ilaṅku*	*eyiṟṟāy*	*eṉ*	*vāḷ*	*pōl*
why	in vain	to say (subj. 2.sg.)	to shine	tooth (obl.) (pron.n. 2.sg.) (voc.)	I (obl.)	brightness	like

வாள்	இழந்த	கண்	தோள்	வனப்பு	இழந்த	மெல்	விரலும்
vāḷ	*iḻanta*	*kaṇ*	*tōḷ*	*vaṉappu*	*iḻanta*	*mel*	*viral-um*
brightness	to lose (p. 3.pl.n.)	eye	shoulder	beauty	to lose (p. 3.pl.n.)	soft	finger + *um*

நாள்	இழந்த	எண்	மிக்கு	நைந்து.
nāḷ	*iḻanta*	*eṇ*	*mikku*	*naintu.*
day	to lose (p. 3.pl.n.)	number	to be much (abs.)	to waste away (abs.)

"What if the the dark mountains, [which previously were] unforested because of the golden light,[1]
are [now] covered with leaves?",[2] you say in vain,[3] you with a shining smile. Like my splendour,
[my] eyes have lost their splendour. [My] shoulders have lost their beauty. [My] soft fingers, too,
have lost count of the days, being very much worn out.

(The same situation.)

[1] What is suggested is that the landscape that was barren during the hot season flourishes again due to the rains. "Golden light" refers to sunshine.

[2] I have taken *pōḻ* as "tender leaf". This meaning is not listed in the TL, but the *Tamiḻ Ilakkaṇap Pērakarāti* gives the meaning "palmyra leaf" (*paṉai olai*). Nacciṉārkkiṉiyār (ad *Kalittokai* 117.8) glosses *pōḻ* as "tender palmyra leaf" (*paṉaṅkuruttu*). Cf. also *Naṟṟiṇai* 169.8 and 271.9. Here, the generic meaning "tender leaf" seems approriate. The OC glosses *malaritaḻ*, "flower-petals". Note that Irā. omits the word *pōḻ*.

[3] For *vāḷā*, cf. the note to the OC.

100. பண்டியையச் சொல்லிய சொற்பழுதான் மாக்கடல்
கண்டியைய மாந்திக்கால் வீழ்த்திருண்—டெண்டிசையுங்
கார்தோன்றக் காதலர் தேர்தோன்றா தாகவே
பீர்தோன்றி நீர்தோன்றுங் கண்.

1a பண்டியையச் A_1, Irā.; பண்டியைச் B

எ-து. பருவம் கண்டு அழிந்த கிழத்தி தோழிக்குச் சொல்லியது.

தாம் முன்பு நம்மைப் பிரிகின்ற நாட்[1] குறிப்படச்[2] சொல்லிய சொல் பழுதாயிற்றால். பெருங் கடல் சென்று கண்டு நிரம்பப் பருகிக் கால் வீழ்த்தே[3] இருண்டு திசை எட்டும் மழை தோன்றக் காதலர் தேர் தோன்றுகின்றதில்லை[4]. ஆதலால்[5] என் கண்கள் பீர்[6] தோன்ற நீர் தோன்றாநின்றன[7] என்றவாறு.

1 நாட் A_1, Irā.; நாட்ட B

2 குறிப்படச் A_1, Irā.; குதிப்படச் B

3 வீழ்த்தே A_1, Irā.; வீழ்த்து B

4 தோன்றுகின்றதில்லை A_1, Irā.; தோன்றுகின்ற நிலமை B

5 ஆதலால் A_1, Irā.; ஆதலான் B

6 பீர் A_1, Irā.; பீர் நிறம் B

7 தோன்றாநினறன B, Irā.; தோன்றாநினறது A_1

பண்டு	இயையச்	சொல்லிய	சொல்	பழுதால்	மாக்	கடல்
paṇṭu	*iyaiya.c*	*colliya*	*col*	*paḻut-āl*	*mā.k*	*kaṭal*
former time	to be agreeable (inf.)	to say (p. pey.)	word	fault + *āl*	great	sea

கண்டு	இயைய	மாந்திக்	கால்	வீழ்த்து	இருண்டு	எண்	திசையும்
kaṇṭu	*iyaiya*	*mānti.k*	*kāl*	*vīḻttu*	*iruṇṭu*	*eṇ*	*ticai.y-um*
to see (abs.)	to be agreaable (inf.)	to drink (abs.)	wind	to cause to fall (abs.)	to become dark (abs.)	eight	direction + *um*

கார்	தோன்றக்	காதலர்	தேர்	தோன்றாது	ஆகவே
kār	*tōṉṟa.k*	*kātalar*	*tēr*	*tōṉṟātu*	*āka.v-ē*
cloud	to appear (inf.)	lover (pl.)	chariot	to appear (neg. 3.sg.n.)	to be (inf.) + *ē*

பீர்	தோன்றி	நீர்	தோன்றும்	கண்.
pīr	*tōṉṟi*	*nīr*	*tōṉṟum*	*kaṇ.*
pīr flower	to appear (abs.)	water	to appear (ip. 3.)	eye

The words that [he] once said to make [me] agree[1] were all false.[2] While the clouds see the great sea, drink from it agreeably,[3] fall due to the wind, become dark, and appear in the eight directions, [my] lover's chariot does not appear. Therefore [the colour of] *pīr* flowers appears,[4] and tears appear in [my] eyes.

(The heroine, who despairs at the sight of the season, speaking to the confidante.)

[1] Lit. "so that it was agreeable [for me]".

[2] For the assertive particle *-āl*, see the notes to TN 7.

[3] For the image of the clouds drinking from the sea, see the notes to TN 93.

[4] The pale-yellow flowers of the *pīr* or sponge gourd (*Luffa actangulata*) are a frequent object of comparison for a pale complexion (being a standard symptoms of lovesickness) (cf. AiAi 2, 116, 118). One wonders if this is already a dead metaphor. A more straightforward translation might be just "pallour appears".

101. வண்டினம் வெளவாத வாம்பலும் வாரிதழான்
வண்டினம் வாய்வீழா மாலையும்—வண்டின
மாராத பூந்தா ரணிதேரான் றான்போகி
வாராத நாளே வரும்.

3c ரணிதேரான் A_1, A_2, A_3, Irā.; ரணிதேரன் B

3d றான்போகி B; றான்போக A_1, A_2, A_3; றான்போத Irā.*

4a வாராத A_1, A_2, A_3, Irā.; வாராதே B

* *Pōki*, "having gone away", seems the most satisfactory reading. The infinitive *pōka* is is grammatically impossible. Irā. emends to *pōta*, "adequately(?)", which does not seem very convincing. The OC omits the word.

எ-து. இதுவும் அது.

வண்டினங்கள் விரும்பாத ஆம்பல் என்னும் பெயரையுடைய[1] குழலும் ஒழுகிய மலர்-களிற் புக்கு வண்டினங்கள் வாய்வீழாத அந்தியாகிய மாலையும் வண்டினங்கள் புக்கு ஒலியாத[2] பூச்செயல்களையுமுடைய புரவி பூண்ட தார்மணிகளையுடைய[3] புரவிகளாலே[4] ஒப்பிக்கப்பட்ட[5] தேரினையுமுடையான் வாராத[6] நாளே வந்து என்னை நலியும் என்ற-வாறு.

1 பெயரையுடைய A_1, Irā.; பேரையுடைய A_3, B

2 ஒலியாத A_1, A_3, Irā.; ஒலிட்டாத B

3 தார்மணிகளையுடைய A_1, Irā.; கார்மணிகளையுடைய B; ‡ார்மணிகளையுடைய A_3

4 புரவிகளாலே A_1, A_3, Irā.; புரவிகளான் B

5 ஒப்பிக்கப்பட்ட A_1, A_3, Irā.; அணியப்பட்ட B

6 வாராத A_1, A_3, Irā.; வாராதே B

வண்டு	இனம்	வெளவாத	ஆம்பலும்	வார்	இதழான்
vaṇṭu	*iṉam*	*vauvāta*	*āmpal-um*	*vār*	*itaḻāṉ*
bee	group	to seize (neg. pey.)	flute + *um*	to be long	petal (instr.)

வண்டு	இனம்	வாய்	வீழா	மாலையும்	வண்டு	இனம்
vaṇṭu	*iṉam*	*vāy*	*vīḻā*	*mālai.y-um*	*vaṇṭu*	*iṉam*
bee	group	mouth	to desire (neg. pey.)	evening + *um*	bee	group

ஆராத	பூம்	தார்	அணி	தேரான்	தான்	போகி
ārāta	*pūm*	*tār*	*aṇi*	*tērāṉ*	*tāṉ*	*pōki*
to sound (neg. pey.)	flower	string of bells	to be adorned	chariot (pron.n. 3.sg.m.)	he/she/it	to go (abs.)

வாராத	நாளே	வரும்.
vārāta	*nāḷ-ē*	*varum.*
to come (neg. pey.)	day + *ē*	to come

The *āmpal* which is not seized by bee-swarms (= the flute-play),[1]
and the *mālai* whose long[2] petals are not frequented[3] by bee-swarms (= the evening),[4]
they come on the days when the man with the chariot adorned with a beautiful *tār*
in which bee-swarms do not buzz (= a string of bells)[5] does not come after he has gone away.

(The same situation.)

The poem includes three instances of an untranslateable word play in which an ambiguous word in disambiguated through an attribute. In all three cases, the disambiguating attribute contains the phrase *vaṇṭ' iṉam*, "bee swarms" and draws on the common knowledge that bees are attracted by flowers. The same type of word play is found in TN 4 and possibly in TN 129.

[1] The word *āmpal* can mean both "water lily" or "flute". Per convention, the heroine is tormented by the flute-play of the cowherds, who return to the village in the evening, as their sound reminds her of her loneliness. Cf. TN 112, 121, 122, 123, TAi 27, AiAi 7, AiE 22, Kain. 30, 35.

[2] The OC understands *vār* as "arranged in order" (*oḻukiya*), a meaning which is also listed in the TL, but the regular meaning "long" seems more appropriate.

[3] The exact meaning of *vāy vīlā* is not entirelly clear. It can be literally understood either as "on which bee-swarms do not fall with their mouths", or as "which bee-swarms do not desire with their mouths". The OC does not gloss.

[4] The word *mālai* can mean both "flower garland" or "evening".

[5] The word *tār* can mean both "flower garland" or "string of bells for a horse". Note that *pūm*, lit. "flowering" is used in a rather loose sense as "beautiful", since the *tār* which is described here is precisely *not* flowering. The OC takes *ār-tal* as "to sound" (glossing *ārāta* with *oliyāta*). Equally possible meanings are "to be full" ("which is not full with bee-swarms") and "to eat" ("on which bee-swarms do not feed").

102. மானெங்குந் தம்பிணையோ டாட மறியுகள
வானெங்கும் வாய்த்து வளங்கொடுப்பக்—கானெங்குந்
தேனிறுத்த வண்டொடு தீதா வெனத்தேரா
தியானிறுத்தே னாவி யிதற்கு.

1d மறியுகள A_1, B, Irā.; மறியுகழ A_2

3a தேனிறுத்த A_2, Irā.; தேனறுத்த A_1; தேனுறுத்த B

3b வண்டொடு A_1, A_2, B; வண்டோடு Irā.*

4c யிதற்கு A_1, A_2, Irā.; யதற்கு B

* The reading in the mss. is ambiguous, but the sociative suffix should be *-oṭu* before consonants.

எ-து. இதுவும் அது.

மான்கள்[1] தம் பிணையொடு[2] கூடி எங்கும் விளையாட அவற்றின் மறிகளும்[3] உகள மழை எங்கும் பெய்து வாய்த்து வளம் கொடுப்பக் காடெங்கும் தேன்களும் தம்மொடு சார்ந்த வண்டுகளோடு தீதா என்று ஒலித்தலான் ஆராயாதே மயங்கிப்[4] பருவத்துக்கு[5] என் ஆவி-யைக் கடனாகக் கொடுத்தேன்[6] என்றவாறு.

1 மான்கள் A_1, Irā.; மான் பிணைகள் B

2 பிணையொடு B; பினைக் A_1 corr.; பிணை A_1; பிணைகளைக் Irā.

3 மறிகளும் A_1, Irā.; மறிகள் B

4 மயங்கிப் A_1, Irā.; மயங்கியப் B

5 பருவத்துக்கு A_1, Irā.; பருவத்து B

6 கொடுத்தேன் Irā.; கொடுத்ததென் A_1; கெடுத்தேன் B

மான்	எங்கும்	தம்	பிணையொடு	ஆட	மறி	உகள
māṉ	*eṅkum*	*tam*	*piṇaiyoṭu*	*āṭa*	*maṟi*	*ukaḷa*
deer	everywhere	they (obl.)	doe (soc.)	to play (inf.)	young one	to jump (inf.)

வான்	எங்கும்	வாய்த்து	வளம்	கொடுப்பக்	கான்	எங்கும்
vāṉ	*eṅkum*	*vāyttu*	*vaḷam*	*koṭuppa.k*	*kāṉ*	*eṅkum*
cloud	everywhere	to flourish (abs.)	fertility	to give (inf.)	forest	everywhere

தேன்	இறுத்த	வண்டொடு	தீதா	எனத்	தேராது
tēṉ	*iṟutta*	*vaṇṭoṭu*	*tītā*	*ena.t*	*tērātu*
bee	to tarry (p. pey.)	bee (soc.)	(onom.)	to say (inf.)	to understand (neg. abs.)

யான்	இறுத்தேன்	ஆவி	இதற்கு.
yāṉ	*iṟuttēṉ*	*āvi*	*itaṟku.*
I	to pay (p. 1.sg.)	soul	this (obl.) (dat.)

When the deer play everywhere with their does, when their young ones jump around,
when the clouds are full everywhere and give abundance, when, everywhere in the forest,
bees make *tītā* together with the drones[1] tarrying [with them]—without knowing,
then I have paid[2] with my soul for this.

(The same situation.)

[1] It is not clear if *vaṇṭu* and *tēṉ* refer to different species of bees, or if they are imagined as male and female bees, respectively.

[2] Note that *iṟu-ttal* is used in two differen meanings in lines 3 and 4, respectively. Here, the OC glosses "I gave my soul as a debt" (*eṉ āviyaik kaṭaṉakak koṭuttēṉ*). Cf. also TN 103.

103. ஒருவந்த மன்றா லுறைமுதிரா நீராற்
கருமந்தான் கண்டழிவு கொல்லோ—பருவந்தான்
பட்டின்றே யென்றி பணைத்தோளாய் கண்ணீரா
லட்டினே னாவி யதற்கு.

2a கருமந்தான் A_1, Irā.; கருமகதான் B
3a பட்டின்றே A_1, Irā.; பட்டின்மே B
4c யதற்கு A_1, Irā.; யிதற்கு B

எ-து. பருவம அன்று என்று வற்புறுத்தின[1] தோழிக்குத் தலைமகள் பருவமே என்று அழிந்து சொல்லியது.

1 வற்புறுத்தின A_1, Irā.; வற்புறுத்தும் B

ஒருவந்த மன்றால் என்பது இது பருவம் என்பது மெய்ம்மை[1] அன்றால் என்றவாறு. உறை[2] முதிரா நீரால் என்பது மழை பெயல்[3] நிரம்பாத நீரால் என்றவாறு. வம்பமழை[4] என்றவாறாம். கருமந்தான் கண்டழிவு கொல்லோ என்பது கருமமாவது பருவம் அல்லாத பருவத்தைக்[5] கண்டு அழிவதோ என்றவாறு. பருவந்தான் பட்டின்றே என்பது பருவம் வந்து பட்டதில்லை என்றவாறு. என்றி என்பது இவை எல்லாம் சொல்லி என்னைத் தேற்றாநின்றாய் என்றவாறு. பணைத்தோளாய் கண்ணீரா லட்டினே னாவி யதற்கு[7] என்பது கண்ணீரே நீராக வார்த்து என் உயிரைப் பருவத்துக்குக் கொடுத்தேன் பணைத் தோளாய் என்றவாறு.*

1 மெய்ம்மை Irā.; மெய்மை A_1, B
2 உறை A_1, Irā.; உரை B

3 பெயல் A_1, Irā.; பெய்ய B

4 வம்பமழை A_1, B; வம்புமழை Irā.

5 பருவத்தைக் A_1, Irā.; பருத்தைக் B

7 யதற்கு A_1, Irā.; யிதற்கு B

* Note the different format of the commentary, where the text of the poem is quoted phrase by phrase. Cf. also the commentary on TN 106 and 108.

ஒருவந்தம்	அன்றால்	உறை	முதிரா	நீரால்
oruvantam	*aṉṟ-āl*	*uṟai*	*mutirā*	*nīr-āl*
certainty	not to be (3.sg.n.) + *āl*	rain	to ripen (neg. pey.)	water + *āl*

கருமம்	தான்	கண்டு	அழிவுகொல்லோ	பருவம்	தான்
karumam	*tāṉ*	*kaṇṭu*	*aḻivu-kollō*	*paruvam*	*tāṉ*
action	he/she/it	to see (abs.)	perishing + *kollō*	season	he/she/it

பட்டின்றே	என்றி	பணைத்	தோளாய்	கண்ணீரால்
paṭṭiṉṟ-ē	*eṉṟi*	*paṇai.t*	*tōḷāy*	*kaṇṇīrāl*
to happen (neg. 3.sg.n.) + *ē*	to say (subj. 2.sg.)	bamboo	shoulder (pron.n. 2.sg.) (voc.)	tear (instr.)

அட்டினேன்	ஆவி	அதற்கு.
aṭṭiṉēṉ	*āvi*	*ataṟku*.
to pour (p. 1.sg.)	soul	that (obl.) (dat.)

"It is not certain.[1] It is [just] water that has not developed into [full] rains.[2]
Should [you] be desolate after [you] have seen the action?
The season has not set in"[3]—thus you say, you with bamboo shoulders.[4]
With my tears, I have poured out my soul for that.

(The heroine speaking in despair, saying: "It is the season" to the confidante, who has comforted her by saying: "It is not the season".)

[1] For *oruvantam*, "certainty", cf. *Tirukkuṟaḷ* 563, 593. For the assertive particle *-āl*, see the notes to TN 7.

[2] The confidante is trying to make the heroine believe that the rainshowers they are witnessing are not a sign of the actual rainy season. Cf. AiAi 9, *Kuṟuntokai* 66.

[3] Note the rare type of negation in *paṭṭiṉṟē*, formed by the perfective stem and the negative auxiliary *il.* Cf. *calittilar* in TN 47 and *aṟintilēm* in Kain. 45.

[4] Women's shoulders are regularly compared to bamboo. Cf. TN 12, 94, 115, 116, TAi 8, 9, 34, AiE 16.

104. ஐந்துருவின் வில்லெழுதி நாற்றிசைக்கு முந்நீரை
யிந்துருவின் மாந்தி யிருங்கொண்மூ—முந்துருவி
னொன்றா யுருமுடைத்தாய்ப் பெய்வான்போற் பூக்கென்று
கொன்றாய்கொன் றாயெற் குழைத்து.

1b வில்லெழுதி A_1, A_2, B, Irā.; வில்லெழு A_3

1d முந்நீரை A_3, B, Irā.; முன்னீரை A_1, A_2

2a யிந்துருவின் A_1, A_2, B, Irā.; யிருந்துருவின் A_3

2d முந்துருவி A_2, A_3, B, Irā.; முந்துருவின் A_1

எ-து. பருவம் கண்டு அழிந்த கிழத்தி கொன்றைக்குச் சொல்லுவாளாய்த் தோழி[1] கேட்பச்[2] சொல்லியது.

(Speech situation missing in A_3.)
1 தோழி A_1, Irā.; தோளி B
2 கேட்பச் B, Irā.; கேட்ப A_1

ஐந்து நிறத்தினையுமுடைய[1] வில்லை எழுதினால் போலக் கோலி முந்நீரைப்[2] பருகி ஈந்தின் கனி போன்று[3] அருந்துகின்ற[4] உருவோடு இருங் கொண்மூ[5] நால் திசைக்கண்ணும் ஒன்றாய் உரும் உடைத்தாய்ப்[6] பெய்யப்படுகின்ற[7] வானம் என்னைக் கொல்கின்றாற்[8] போலத் தழைத்துப்[9] பூப்பேன் என்று என்னைக் கொன்றாய் கொன்றைமரமே என்றவாறு.

[Only A_3:] ஈந்து இந்து என விகாரம் ஆயிற்று.*

1 நிறத்தினையுமுடைய A_1, A_3, Irā.; நிறத்தையுமுடைய B
2 முந்நீரைப் A_3, B, Irā.; முன்னீரைப் A_1
3 போன்று A_1, A_3, Irā.; யொன்று B
4 அருந்துகின்ற A_1, A_3, Irā.; அழுந்துகின்ற B
5 இருங்கொண்மூ Irā.; இருங்கொண்மு A_1, A_3; இருங்கண்மூ B
6 உடைத்தாய்ப் A_1, A_3, Irā.; உறைத்தாய்ப் B
7 பெய்யப்படுகின்ற A_1, A_3; பொயப்படுகின்ற B; பெய்யப்படுகின்றன Irā.
8 கொல்கின்றாற் A_3, B, Irā.; கொல்கின்றாப் A_1
9 தழைத்துப் B; தளைத்தும் A_1; தழைந்து A_3; தழைத்தும் Irā.

* The commentary is followed by an additional note (only in A_3) stating: "*Īntu* has undergone mutation to *intu*".

ஐந்து	உருவின்	வில்	எழுதி	நால்	திசைக்கும்	முந்நீரை
aintu	*uruviṉ*	*vil*	*eḻuti*	*nāl*	*ticaikk-um*	*munnīrai*
five	shape (obl.)	bow	to paint (abs.)	four	direction (dat.) + *um*	sea (acc.)

இந்து = ஈந்து?	உருவின்	மாந்தி	இருங்	கொண்மூ	முந்து	உருவின்
intu = īntu?	*uruviṉ*	*māṉti*	*irum*	*koṇmū*	*muntu*	*uruviṉ*
date?	shape (obl.)	to drink (abs.)	large/dark	cloud	antiquity?	shape (obl.)

ஒன்று	அய்	உரும்	உடைத்து	அய்	பெய்	வான்	போல்	பூக்கு	என்று
oṉṟu	*āy*	*urum*	*uṭaittu*	*āy*	*pey*	*vāṉ*	*pōl*	*pūkku*	*eṉṟu*
one	to be (abs.)	thunder	to possess (part.n. 3.sg.n.)	to be (abs.)	to rain	sky	like	to blossom (subj. 1.sg.)	to say (abs.)

கொன்றாய்	கொன்றாய்	என்	குழைத்து.
koṉṟāy	*koṉṟāy*	*eṉ*	*kuḻaittu*.
laburnum tree (voc.)	to kill (p. 2.sg.)	I (obl.)	to sprout (abs.)

Just like the sky, where dark clouds with the colour of dates(?)[1]
paint a five-coloured bow, drink up the sea[2] in the four directions,
become one in the shape of old (?),[3] thunder, and pour rains—
by saying "I will flower", you kill me, laburnum tree,[4] as you sprout.[5]

or: … you kill me, laburnum tree, crushing me [to death].

(The heroine, who despairs at the sight of the season, speaking for the confidante to hear by speaking to the laburnum tree.)

[1] The phrase *int' uruviṉ* has to be taken as an attribute of *irum koṇmū*, "dark clouds", despite the slightly akward word order. The OC explains *intu* as metrical shortening of *īntu*, "date" (the fruit). A parallel is found in KārN 40 (*intiṉ karu vaṇṇam koṇṭaṉṟu eḻil vāṉam*, "the beautiful clouds have taken the dark colour of dates [?]"), where the OC also explains *intu* as shortening of *īntu*. I do not find dates a particularly obvious object of comparison for rainclouds, and I am not aware of any parallels. Other meanings listed for *intu* in the *Tamil Lexicon*, include "charcoal" and "black bear". Although they are only attested in a very late lexicographical work (the *Akarāti Nikaṇṭu*), these meanings might be worth considering.

[2] For the image of the clouds drinking from the sea, see the notes to TN 93.

[3] I take *muntu* as "antiquity", although I am not sure how to understand "appearance of old". The OC omits the whole phrase.

[4] For the laburnum tree, see the notes to TN 98. Note the word play based on the homophony of *koṉṟāy* (vocative of *koṉṟai*, "laburnum tree") and *koṉṟāy*, "you kill".

[5] I take *kuḻai-ttal* as "to sprout", following the OC's gloss *taḻaittu*. Another possibility is to take *kuḻai-ttal* in the meaning "to mash" or "to crush" (cf. *Naṟṟiṇai* 51.8, *Kalittokai* 73.12, 112.23, *Cilappatikāram* 2.58).

105. எல்லை தருவான் கதிர்பருகி யீன்றகார்
கொல்லைதரு வான்கொடிக ளேறுவகாண்—முல்லை
பெருந்தண் டளவொடுதங் கேளிரைப்போற் காணாய்
குருந்தங் கொடுங்கழுத்தங் கொண்டு.

2c ளேறுவகாண் A_1, Irā.; ளேறுங்காண் B
3b டளவொடுதங் B; Irā.; டளவொதெங் A_1
3d காணாய் B, Irā.; காணா A_1

எ-து. பருவம் கண்டு அழிந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

பகலினைத்[1] தரும் கதிரோனுடைய கதிர்கள் நீரை நிலத்தின்கண்[2] பருகி ஈன்ற காரானே கொல்லைகள் தருகின்ற வாலிய கொடிகள் மரந்தோறும் சென்று ஏறுவனவற்றைக்[3] காணாய். அன்றியேயும் முல்லைகள் பெருந்தண்[4] தளவுடனே குருந்தம் கொடும் கழுத்தம் கொண்டு தம் கேளிரைப் போல்[5] ஏறுவன[6] காணாய்[7] என்றவாறு.

1 பகலினைத் A_1, Irā.; பகலிதிரினைத் B
2 நீரை நிலத்தின்கண் A_1, Irā.; நிலத்த நீரைப் B
3 ஏறுவனவற்றைக் A_1, Irā.; ஏற்றுவனவற்றைக் B
4 பெருந்தண் A_1, Irā.; பெரும் Ø B
5 போல் A_1, Irā.; போல B
6 ஏறுவன A_1, Irā.; ஏற்றுவன B
7 காணாய் A_1, Irā.; காணா B

எல்லை	தருவான்	கதிர்	பருகி	ஈன்ற	கார்
ellai	*taruvāṉ*	*katir*	*paruki*	*īṉṟa*	*kār*
daytime	to give (part.n. ip. 3.sg.m.)	ray	to drink (abs.)	to bring forth (p. pey.)	cloud

கொல்லை	தரு	வால்	கொடிகள்	ஏறுவ	காண்	முல்லை
kollai	*taru*	*vāl*	*koṭikaḷ*	*ēṟuva*	*kāṇ*	*mullai*
clearing	to give	white	creeper (pl.)	to rise (ip. 3.pl.n.)	to see (imp.)	jasmine

பெரும்	தண்	தளவொடு	தம்	கேளிரைப்	போல்	காணாய்
perum	*taṇ*	*taḷavoṭu*	*tam*	*kēḷirai.p*	*pōl*	*kāṇāy*
big	cool	golden jasmine (soc.)	they (obl.)	relatives (acc.)	like	to see (imp.)

குருந்தம்	கொடும்	கழுத்தம்	கொண்டு.
kuruntam	*koṭum*	*kaḻuttam*	*koṇṭu*.
kuruntu tree	curved	neck	to take (abs.)

Because of the clouds, which the the day-bringer's rays have created by sucking up [the water][1]
the white creepers yielded by the clearing climb.—Look! The jasmine[2]
along with the large cool golden jasmine[3]—look!—take the bent neck
of the *kuruntu* tree[4] as if it was their beloved.

(The heroine, who despairs at the sight of the season, speaking to the confidante.)

[1] For the idea of the sun creating rainclouds by absorbing water, cf. TN 95.

[2] The jasmine (*mullai*, *Jasminum sambac*) is the eponynous plant of the *mullai* setting. It is said to bloom at the beginning of the rainy season. Cf. TN 106, 108, 112, 116, TAi 22, 26, 29, AiAi 3, 6, 9, AiE 15, 20, 21, 24, Kain. 25, 34, KārN 14, 21.

[3] For the golden jasmine (*taḷavu*), see the notes to TN 93.

[4] For the *kuruntu* tree (also *kuruntam*), see the notes to TN 93.

106. என்னரே யேற்ற துணைபிரிந்தா ராற்றென்பா
ரன்னரே யாவ ரவரவர்க்கு—முன்னரே
வந்தாரந் தேங்கா வருமுல்லை சேர்தீந்தேன்
கந்தாரம் பாடுங் களித்து.

1c துணைபிரிந்தா A_1, A_2, A_3, B, Nam.; துணைப்பிரிந்தா Irā.*

2c ரவரவர்க்கு A_1, A_2, A_3, B, Nam., Irā.; ரவர்க்கு Nam.v

* Irā. adds the doubling of *p*, probably because he feels that the unmarked accusative *tuṇai* should trigger consonant doubling. However, this is not necessary for neuter nouns (*tuṇai*, lit. "company", here refers to a human being, but grammatically is a neuter).

எ-து. வற்புறுத்தும் தோழிக்குத் தலைமகள் வன்புறை[1] எதிர் அழிந்து சொல்லியது.

1 வன்புறை A_3, Irā.; வன்பொறை A_1, B*

* See the notes to the *kiḷavi* of TN 98.

என்னரே யேற்ற துணைபிரிந்தார் என்பது எப்பெற்றியர்[1] அவர் தமக்கு அன்புபட்ட காதலரைப் பிரிந்தார் என்றவாறு. ஆற்றென்பா ரன்னரே[2] யாவ ரவரவர்க்கு[3] என்பது அக்

காதலித்தாரைப்[4] பிரிந்தாரோடு ஒப்பர் பிரியப்பட்டார்க்கு[5] ஆற்றி இறந்துபடாது இருக்கச்[6] சொல்லுவார் என்றவாறு. முன்னரே வந்தாரந் தேங்கா வருமுல்லை சேர்தீந்தேன்[7] கந்தாரம் பாடுங் களித்து என்பது எனக்கு முன்னே வந்து சந்தனப் பொழிலையும் தேங்காவின்கண் வளர் முல்லைகளையும் சேர்ந்த[8] தீம் தேன்கள் கந்தாரம் என்னும் பண்ணினைக் களித்துப் பாடாநின்றன என்றவாறு.*

1 எப்பெற்றியர் A_1, A_3, Irā.; எப்பெற்றியார் B

2 ரன்னரே A_3, B, Irā.; ரின்னரே A_1

3 ரவரவர்க்கு A_1, A_3, Irā.; ரவரலர்க்கு B

4 காதலித்தாரைப் B, Irā.; காதலித்தாரை A_1; காலித்தாரைப் A_3

5 ஒப்பர் பிரியப்பட்டார்க்கு B, Irā.; ஒப்பர் பிரிவப்பட்டார்க்கு A_1; ஒ...டார்க்கு A_3 [broken margin]

6 இருக்கச் A_1, A_3, Irā.; இருத்தச் B

7 சேர்தீந்தேன் A_3, Irā.; சேர்திர்ந்தேன் A_1; சேர்திந்தேன் B

8 சேர்ந்த Irā.; சேரத் A_1, A_3, B

* Note the different format of the commentary, where the text of the poem is quoted phrase by phrase. Cf. also the commentary on TN 103 and 108.

என்னரே	ஏற்ற	துணை	பிரிந்தார்	ஆற்று	என்பார்
eṉṉar-ē	*ēṟṟa*	*tuṇai*	*pirintār*	*āṟṟu*	*eṉpār*
what (3.pl.ep.) + *ē*	to be suitable (p. pey.)	companion	to be separated (part.n. p. 3.pl.ep.)	to endure (imp.)	to say (part.n. p. 3.pl.ep.)

அன்னரே	ஆவர்	அவர்	அவர்க்கு	முன்னரே
aṉṉar-ē	*āvar*	*avar*	*avarkku*	*muṉṉar-ē*
such (3.pl.ep.) + ē	to be (ip. 3.pl.ep.)	they	they (dat.)	before + *ē*

வந்து	ஆரம்	தேம்	கா	வரு	முல்லை	சேர்	தீம்	தேன்
vantu	*āram*	*tēm*	*kā*	*varu*	*mullai*	*cēr*	*tīm*	*tēṉ*
to come (abs.)	sandalwood	sweetness	grove	to come	jasmine	to join	sweet	bee

கந்தாரம்	பாடும்	களித்து.
kantāram	*pāṭum*	*kaḷittu*.
N of a melody type	to sing (ip. 3.)	to rejoice (abs.)

What kind of person is someone who leaves their agreeable[1] lover?
Those who tell [me] to endure are just like those for them.[2] Coming before [me],
sweet bees that join the sandal trees and the jasmine growing in the sweet grove[3]
joyfully hum in the *kantāram* melody.[4]

(The heroine speaking in despair, in spite of the comforting, to the confidante, who is comforting her.)

[1] I take *ēl-tal*, normally "to receive", as an intransitive verb meaning "to be suitable" (a meaning also listed in the TL). The OC glosses *aṉpupaṭṭa*, "beloved". The meaning "to love" for *ēl-tal* is also listed in the TL, but only with reference to this passage

[2] I.e. just like those who leave their lover for those who are left.

[3] The OC reads *varu mullai* and glosses *varu*, lit. "coming", with *vaḷar*, "growing". One could also split the sandhi as *aru mullai*, "rare jasmine".

[4] *Kantāram* is the name of one of the ancient Tamil melody types. For bees humming in a specific melody, cf. TN 63, 95, 120, TAi 16, KārN 15.

107. கருவுற்ற காயாக் கணமயிலென் றஞ்சி
யுருமுற்ற பூங்கோட லோடி—யுருமுற்ற
வைந்தலை நாகம் புரையு மணிக்கார்தா
னென்னலையே வந்த தினி.

3d மணிக்கார்தா A_2, B, Irā.; மணிக்காராதா A_1

4a னென்றலையே A_1, A_2, B; னெந்தலையே Irā.*

* Irā.'s emendation of *ennalaiyē* (< *en talaiyē*), "upon me", to *entalaiyē* (< *em talaiyē*) is probably based on the OC, which glosses *emmuṭaiya māṭṭē*.

எ-து. பருவம் கண்டு அழிந்த கிழத்தி தோழிக்கு[1] சொல்லியது.

1 கிழத்தி தோழிக்கு emend.; கிழவி தோழிக்கு B; கிழத்திக்குத் தோழி A_1, Irā.*

* Note that the two mss. disagree over the identity of the speaker and the listener. Based on the poem itself, it seems more plausible that the speaker is the heroine. I have therefore adopted the reading of B, but emended *kiḻavi* to *kiḻatti*.

கருக் கொண்டு பூத்த காயாம்பூவினைத்[1] தொகுதியையுடைய[2] மயில் என்று அஞ்சி உருமுற்ற ஐந்தலை நாகங்கள் உருமுற்ற பைங்[3] கோடல்களை ஒவ்வாநின்ற அழகிய இக் கார்ப் பருவம் தான் எம்முடைய மாட்டே நலிய வந்தது இப்பொழுது என்றவாறு.

1 காயாம்பூவினைத் B, Irā.; காயம்பூவினைத் A_1

2 தொகுதியையுடைய B, Irā.; தொகுதியுடைய A_1

3 பைங் A_1, B; பூங் Irā.

கரு	உற்ற	காயாக்	கண	மயில்	என்று	அஞ்சி
karu	*uṟṟa*	*kāyā.k*	*kaṇa*	*mayil*	*eṉṟu*	*añci*
pregnancy / dark colour	to happen (p. pey.)	ironwood tree	group	peacock	to say (abs.)	to be afraid (abs.)

உரும்	உற்ற	பூம்	கோடல்	ஓடி	உரும்	உற்ற
urum	*uṟṟa*	*pūm*	*kōṭal*	*ōṭi*	*urum*	*uṟṟa*
thunder	to happen (p. pey.)	flower	white glory lily	to run (abs.)	fear	to happen (p. pey.)

ஐம்	தலை	நாகம்	புரையும்	அணிக்	கார்	தான்
aim	*talai*	*nākam*	*puraiyum*	*aṇi.k*	*kār*	*tāṉ*
five	head	snake	to resemble (ip. pey.)	ornament	rainy season	he/she/it

என்	தலையே	வந்தது	இனி.
eṉ	*talai.y-ē*	*vantatu*	*iṉi.*
I (obl.)	head + *ē*	to come (p. 3.sg.n.)	now

Afraid of the pregnant[1] *kāyā* trees, mistaking them for a flock of peacocks,[2]
a frightened five-headed snake[3] runs to a flowering glory lily,[4] which has experienced thunder,[5]
and resembles it.[6]—The beautiful rainy season

has now come upon me.

(The heroine, who despairs at the sight of the season, speaking to the confidante.)

In the original, the poem consists of a single sentence with everything up to *puraiyum* in line 3 being a *peyareccam* clause desribing *kār*: "the beautiful rainy season, when a frightened five-headed snake …". For the sake of readability, the sentence has been split into two in the translation.

[1] The noun *karu* usually means "pregnancy". This seems to be also the interpretation of the OC, which glosses *karuk koṇṭa*. That the *kāyā* trees are described as "pregnant" implies that they bear flowers. One could perhaps also understand *karu* as "darkness" (cf. the adjective *karu*, although the noun usually is *kār*), which then would refer to the dark-blue colour of the *kāyā* flowers.

[2] The *kāyā* tree (*Memecylon edule*) has dark-blue flowers, which are here compared to peacocks. Cf. TAi 21, KārN 8.

[3] For five-headed snakes, cf. TN 13.

[4] *Kōṭal* refers to the white variety of the glory lily (*Gloriosa superba*), whereas the red variety is known as *kāntaḷ*. Particularly the white variety is associated with the *mullai* setting. Cf. TN 111, 119, TAi 21, 29, AiE 17, KāN 11.

[5] Note how the poem plays on the word *urum*, which can mean both "fear" or "thunder".

[6] The flowers of the glory lily are regularly compared to snakes (cf. TN 119, TAi 3, 29, KārN 11). The comparison is based on the elongated form of the petals.

108. கண்ணுள வாயின் முலையல்லை காணலா
மெண்ணுள வாயி னிறவாவா—லெண்ணுளவா
வன்றொழிய நோய்மொழிசார் வாகா துருமுடைவா
னொன்றொழிய நோய்செய்த வாறு.

2c னிறவாவா B, Irā.; னிறவவா A_1

3b நோய்மொழிசார் B; நோய்மொழிச்சார் A_1, Irā.*

3d துருமுடைவா A_1, Irā.; துருமுடையா B

* The reading *nōymoḻi* (without consonant doubling) is preferable because *nōymoḻi* is the subject of *cārv' ākātu*. It is also found in the OC in both mss.

எ-து. பருவம் அன்று என்று வற்புறுத்தும்[1] தோழிக்குத் தலைமகள் ஆற்றாது சொல்லியது.

1 வற்புறுத்தும் A_1, Irā.; வற்புறத்தும் B

உருமுடைவா னொன்றொழிய நோய்செய்தவாறு[1] கண்ணுள வாயின் முல்லையல்லை[2] காணலாம் என்பது உருமுடைய மழை இறந்துபாடு[3] ஒன்றையும்[4] ஒழிய மற்றைக்[5] குறிப்புக்கள் ஒன்பதும் எனக்கு உளவாம்படி என்னை நோய் செய்தவாற்றை நினக்கும் கண்ணுளவாயின் முல்லை அல்லை[6] ஆதலின்[7] நினக்குக் காணலாம்[8] என்றவாறு. எண்ணுள வாயி னிறவாவால் என்பது அவர் குறித்த இத்துணை[9] நாளுள் வருகின்றேன் என்ற எண் பழுதுபடா[10] ஆயின் அவர் சொன்ன நாளைக் கடவா அன்றோ[11] என்றவாறு. எண்ணுளவா வன்றொழிய[12] நோய்மொழிசார்[13] வாகாது என்பது என்னை ஆற்றுவிக்க வேண்டி நின் மனத்தின்கண் எண்ணின எண்ணின்கண் உள்ளவாவன்றி என்-னோயொழிதற்கு நீ ஆற்றுவிக்கின்ற நின் மொழி எனக்குச் சார்வு ஆகாது என்றவாறு.*

1 நோய்செய்தவாறு A_1, Irā.; நோய்செய்கவாறு B

2 முல்லையல்லை A_1, Irā.; முலையல்லை B

3 மழை இறந்துபாடு B; மனைப்பிறந்துபாடு A_1; வான் இறந்துபாடு Irā

4 ஒன்றையும் A_1, Irā.; ஒன்றையம் B

5 மற்றைக் Irā.; மறைக் A_1, B

6 அல்லை A_1, Irā.; Ø B

7 ஆதலின் A_1, Irā.; ஆதலான் B

8 நினக்குக் காணலாம் emend.; நினக்குக் காணலன் B; நினக்குக் காண் A_1; நக்குக் காண் Irā.†

9 குறித்த இத்துணை Irā.; குறித்த துணை A_1; குறித்துத் துணை B

10 பழுதுபடா A_1, Irā.; பழுதுபாடா B

11 அன்றோ A_1, Irā.; என்றோ B

12 வன்றொழிய A_1, Irā.; வென்றொழிய B

13 நோய்மொழிசார் A_1, B; நோய்மொழிச்சார் Irā.

* Note the different format of the commentary, where the text of the poem is quoted phrase by phrase. Cf. also the commentary on TN 103 and 106.

† I suggest emending the reading *kāṇalaṉ*, found in B, to *kāṇalām*, reflecting the wording of the poem. The form *niṉakku* is slightly difficult to account for, but it seems possible that the *-lām* construction required the dative. Irā. emends *niṉakku* to *nakku*, "laughing".

கண்	உள	ஆயின்	முலை = முல்லை	அல்லை	காணல்	ஆம்
kaṇ	*uḷa*	*āyiṉ*	*mulai = mullai*	*allai*	*kāṇal*	*ām*
eye	to exist (3.pl.n.)	to be (cond.)	jasmine	not to be (2.sg.)	to see (vb.n.)	to be (ip. 3.)

எண்	உள	ஆயின்	இறவாவால்	எண்	உள	ஆ (= ஆக)
eṇ	*uḷa*	*āyiṉ*	*iṟavā.v-āl*	*eṇ*	*uḷa*	*ā* (= *āka*)
number	to exist (3.pl.n.)	to be (cond.)	to go beyond (neg. 3.pl.n.) + *āl*	number	to exist (part.n. 3.pl.n.)	to be (inf.)

அன்று	ஒழிய	நோய்	மொழி	சார்வு	ஆகாது	உரும்	உடை	வான்
aṉṟu	*oḻiya*	*nōy*	*moḻi*	*cārvu*	*ākātu*	*urum*	*uṭai*	*vāṉ*
not to be (3.sg.n.)?	to cease (inf.)	pain	speech	support	to be (neg. 3.sg.n.)	thunder	to possess	cloud

ஒன்று	ஒழிய	நோய்	செய்த	ஆறு.
oṉṟu	*oḻiya*	*nōy*	*ceyta*	*āṟu.*
one	to cease (inf.)	pain	to do (p. pey.)	way

If [you] have eyes, [you] are not a jasmine flower.[1] [You] can see:[2]
If there are numbers, they do not pass.[3] As I stayed behind on that day,[4]
there being a number (?),[5] [your] painful words are not a support, as[6]
the clouds, possessing thunder, have caused [all] afflictions except one.[7]

(The heroine being unable to endure and speaking to the confidante, who comforts her by saying: "It is not the season".)

[1] The OC suggests to take *mulai* as metrical liberty for *mullai*, "jasmine", which seems reasonable, as *mulai*, "breast", does not make sense in the context. The jasmine is often said to laugh (based on the frequent comparison of jasmine flowers to teeth; cf. e.g. TN 110). The point, therefore, seems to be that the confidante should not laugh at the heroine's affliction because, unlike the jasmine flowers, she is a sentient being and can see the heroine's affliction.

[2] Note the construction verbal noun + *ām* for "can" (as in modern Tamil). Cf. TN 67, 87, 151.
[3] "Number" probably refers to the number of the days of the hero's absence, which the heroine keeps counting (cf. TN 99). For the assertive particle *-āl*, see the notes to TN 7.
[4] I take *aṉṟu* as "that day", i.e. the day when the hero left.
[5] "Number" probably again refers to the number of days on which the heroine has to wait for the hero.
[6] Lit. "the way in which". The OC connects *āṟu* with *kāṇalām*, "[you] can see", in line 1, which seems less natural from the point of view of word order.
[7] Refers to the ten "stages of passion" (*kāmavastha*), which are recognized by both Sanskrit and Tamil poetics (see Wilden 2013). The last stage is death.

109. என்போ லிகுளை யிருங்கடன் மாந்தியகார்
பொன்போறார் கொன்றை புரிந்தன—பொன்போற்
றுணைபிரிந்து வாழ்கின்றார் தோன்றுவர் தோன்றா
ரிணைபிரிந்து வாழ்வா ரினி.

1b லிகுளை B, Irā.; லீகுளை A_1
2c புரிந்தன A_1, Irā.; புரிந்தினப் B
4b வாழ்வா A_1, B; வாழ்வ Irā.

எ-து. பருவம் கண்டு ஆற்றாளாய தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

என்னைப் போன்ற தோழி! பொன் போன்ற தார்களைக் கொன்றைகள் ஈனும் வகை இருங் கடலைப் பருகின முகில்கள். ஆதலாற் பொன் போலப் பெறுதற்கு அரிய தம் துணைகளைப் பிரிந்து போய் வாழ்கின்றார் அத்[1] துணைக்கண்மாட்டுத் தோன்றுவர். நம்மோடு இணை[2] தலைப்பிரிந்து வாழ்கின்றார் இப் பருவத்தின்கண்ணும் தோன்று-கின்றிலர்[3] என்றவாறு.

1 அத் B, Ira.; ஆத் A_1
2 இணை B, Irā.; இனை A_1
3 தோன்றுகின்றிலர் A_1, Irā.; தோற்றுக்கின்றிலர் B

என்	போல்	இகுளை	இரும்	கடல்	மாந்திய	கார்
eṉ	*pōl*	*ikuḷai*	*irum*	*kaṭal*	*māntiya*	*kār*
I (obl.)	like	female friend	large/dark	sea	to drink (p. 3.pl.n.)	cloud

பொன்	போல்	தார்	கொன்றை	புரிந்தன	பொன்	போல்
poṉ	*pōl*	*tār*	*koṉṟai*	*purintaṉa*	*poṉ*	*pōl*
gold	like	garland	laburnum tree	to make (p. 3.pl.n.)	gold	like

துணை	பிரிந்து	வாழ்கின்றார்	தோன்றுவர்	தோன்றார்
tuṇai	*pirintu*	*vāḻkiṉṟār*	*tōṉṟuvar*	*tōṉṟār*
companion	to be separated (abs.)	to live (part.n. pres.? 3.pl.ep.)	to appear (ip. 3.pl.ep.)	to appear (neg. 3.pl.ep.)

இணை	பிரிந்து	வாழ்வார்	இனி.
iṇai	*pirintu*	*vāḻvār*	*iṉi.*
pair	to be separated (abs.)	to live (part.n. ip. 3.pl.ep.)	now

Friend like me! The clouds have drunk from the great sea.[1]
The laburnum trees have made garlands like gold.[2] Those who live[3]
separated from their gold-like lovers, will appear. [But] he does not appear:
he who lives separated from his partner.

(The heroine, who cannot endure at the sight of the season, speaking to the confidante.)

[1] For the image of the clouds drinking from the sea, see the notes to TN 93.

[2] For the laburnum trees, see the notes to TN 98.

[3] Note the form *vāḻkiṉṟār*, which seems to be an early instance of the present tense suffix *-kiṉṟ-*. Alternatively, it can be understood as containing the auxiliary *kil-tal*, "to be able" ("those who are able to live").

110. பெரியார் பெருமை பெரிதே யிடர்க்கூர்
ணரிய ரெளியரென் றாற்றாப்—பரிவாய்த்
தலையழுங்கத் தண்டளவந் தாநகக்கண் டாற்றா
மலையழுத சால மருண்டு.

1d யிடர்க்கா A_1, Irā., NP; யிடர்க்க B, Rāj.

2a ணரிய A_1, B; ணரியா Irā.

2c-d றாற்றாப் பரிவாய்த் Irā.; றாற்றாற A_1; றாற்றாறப் பரியா B*

3a தலையழுங்கத் A_1, Irā.; தலையழுவுங்கத் B

3c தாநகக்கண் Irā.; தானகத்தாண் A_1; தானகத்தாத்தாண் B†

* Both manuscript readings are clearly faulty. Irā.'s emendation seems reasonable judging from the OC.

† Again, Irā.'s emendation seems reasonable on the basis of the OC.

எ-து. இதுவும் அது.

பெரியாராய்[1] இருப்பார் பெருமைக் குணம் மெய்ம்மையாகப்[2] பெரிதே. காண்[3]! முன் அரியராய்[4] உள்ளார் இடர் வந்த இப்பொழுது எளியார்[5] ஆயினார் என்று இரங்கி அழுங்கி[6] ஆற்றாவாய் மலைகள் மிகவும் அழுதன தலைசாய்க்கும் வகை பரிவாய்த் தண் தளவங்கள் தம்[7] சிறுமையால் நகக்[8] கண்டு என்றவாறு.

1 பெரியாராய் A_1, Irā.; பெரியராய் B

2 மெய்ம்மையாகப் B; மெய்மையாகப் A_1, Irā.

3 காண் A_1, B; காண Irā.*

4 அரியராய் B; இரியாராய் A_1; அரியாராய் Irā.

5 எளியார் A_1, B; எளியர் Irā.

6 அழுங்கி A_1, Irā.; மயங்கி B

7 தளவங்கள் தம் A_1, Irā; தளவங்கண்டஞ் B

8 சிறுமையால் நகக் Irā.; சிறுமையாகக் A_1; சிறுமையாநதக் B†

* The reading in the mss. is ambiguous, but I suggest interpreting it as *kāṇ* (reflecting the wording of the poem). Irā. interprets it as *kāṇa*, which he seems to connect with *muṉ ariyarāy uḷḷār.*

† Irā.'s emendation seems reasonable.

பெரியார்	பெருமை	பெரிதே	இடர்க்	காண்
periyār	*perumai*	*perit-ē*	*iṯar.k*	*kāṇ*
great (3.pl.ep.)	greatness	great (3.sg.n.)	affliction	to see (imp.)

அரியர்	எளியர்	என்று	ஆற்றாப்	பரிவு	அய்த்
ariyar	*eḷiyar*	*eṉṟu*	*āṟṟā.p*	*parivu*	*āy.t*
rare (3.pl.ep.)	easy (3.pl.ep.)	to say (abs.)	to endure (neg. pey.)	distress	to be (abs.)

தலை	அழுங்கத்	தண்	தளவம்	தாம்	நகக்	கண்டு	ஆற்றா
talai	*aḻuṅka.t*	*taṇ*	*taḷavam*	*tām*	*naka.k*	*kaṇṭu*	*āṟṟā*
head	to suffer (inf.)	cool	golden jasmine	they	to smile (inf.)	to see (abs.)	to endure (neg. pey.)

மலை	அழுத	சால	மருண்டு.
malai	*aḻuta*	*cāla*	*maruṇṭu.*
mountain	to weep (p. 3.pl.n.)	very much	to be confused (abs.)

The great ones' greatness is great. See, while [I] hang [my] head[1] in distress,[2]
unable to endure[3] in [my] affliction that the one who [once] was easy [now] is rare,[4]
the cool golden jasmine laughs.[5]—Seeing that, the mountains,
unable to endure, are weeping, being very much confused.[6]

(The same situation.)

In the original *naka* is dependant on *kaṇṭu*, thus: "seeing that the cool golden jasmine laughs while …". For the sake of readability, the sentence has been split in two in the translation.

[1] *Talai* can also be used as an intensifying prefix, but here it perhaps is better taken literally as "head".

[2] It seems best to take *parivāy* as an adverb modifying *talai aḻuṅka*. The usual meaning of *parivu* is "affection", but here context speaks in favour of the meaning "distress", which is also listed in the TL.

[3] *Āṟṟā* has to be taken as a negative *peyareccam* modifying *parivu*, so lit. "in the distress of being unable to endure".

[4] The phrase *ariyar eḷiyar* is not very clear, but it seems best to take it to refer to the hero, who was easy to access before his departure, but now cannot be easily met (for *eḷi*, "easy" usesd in this sense, cf. *Kuṟuntokai* 269). *Ariyar eḷiyar* can also be understood as "the rare ones [now] are mean" (for *eḷi*, "despicable", cf. TN 123).

[5] For the golden jasmine (*taḷavam*), see the notes to TN 93. The blossoming of the jasmine is described as "laughing" because jasmine flowers are often compared to teeth, and vice versa.

[6] The mountains are said to "weep" because the waterfalls are in full spate during the rainy season.

111. கானங் கடியரங்காக் கைம்மறிப்பக் கோடலார்
வானம் விளிப்பவண் டியாழாக—வேனல்
வளரா மயிலாட வாட்கண்ணாய் சொல்லா
யுளராகி யுய்யும் வகை.

1c கைம்மறிப்பக் Irā.; கைம்மரிப்பக் B; கைமறிபக் A_1; கைமறிப்பக் A_1 corr.

2a வானம் B, Irā.; வான A_1

2b விளிப்பவண் B, Irā.; விழிப்பவண் A_1

3a-b வளரா மயிலாட A_1, Irā.; வளராட B

எ-து. இதுவும் அது.

(Speech situation missing in A_1.)

கானம் கடி[1] அரங்காகக் கோடலார்[2] வியந்து கைம்மறிப்ப[3] முகில் பாட வண்டுகள் யாழாக[4] வேனற்காலத்துக் களியாத மயில் களித்து ஆடாநிற்க, வாட் கண்ணாய், சொல்லாய் காதலரைப் பிரிந்தார் இறந்துபடாது[5] உளராகி உய்யும் திறத்தை என்றவாறு.

1 கானம் கடி A_1, Irā.; காடே மிக்க B
2 கோடலார் B, Irā.; கோடலர் A_1
3 கைம்மறிப்ப B, Irā.; கைமறிப்ப A_1
4 யாழாக B, Irā.; யாழக A_1
5 இறந்துபடாது B, Irā.; இறந்துபாடாது A_1

கானம்	கடி	அரங்கு	ஆக் (= ஆகக்)	கைம்மறிப்பக்	கோடலார்
kāṉam	*kaṭi*	*araṅku*	*ā.k* (= *āka.k*)	*kaimmaṟippa.k*	*kōṭalār*
forest	fragrance	stage	to be (inf.)	to wave the hand (inf.)	white glory lily (pl.)

வானம்	விளிப்ப	வண்டு	யாழ்	அக	வேனல்
vāṉam	*viḷippa*	*vaṇṭu*	*yāḻ*	*āka*	*vēṉal*
cloud	to sing (inf.)	bee	lute	to be (inf.)	heat

வளரா	மயில்	ஆட	வாள்	கண்ணாய்	சொல்லாய்
vaḷarā	*mayil*	*āṭa*	*vāḷ*	*kaṇṇāy*	*collāy*
to grow (neg. pey.)	peacock	to dance (inf.)	brightness	eye (pron.n. 2.sg.) (voc.)	to say (imp.)

உளர்	ஆகி	உய்யும்	வகை.
uḷar	*āki*	*uyyum*	*vakai*.
to exist (part.n. 3.pl.ep.)	to be (abs.)	to live (ip. pey.)	manner

When the forest is the fragrant stage, when the glory lilies[1] wave their hands,[2]
when the clouds sing,[3] when the bees are the lute, and the when peacock,
which does not thrive in the heat, dances[4]—then tell me, you with bright eyes,[5]
how [I] can stay alive.[6]

(The same situation.)

[1] For the (white) glory lilies (*kōṭal*), see the notes to TN 107. For the comparison of glory lilies to hands, see the notes to TN 72. Note the human plural suffix *-ār* in *kōṭalār*, which seems highly unusual, although there is a parallel in TN 123 (*kuḻalār*). One could also split *kōṭal* and *ār vāṉam*, "full sky", but this seems less likely, since there should be a caesura at the end of the line.

[2] *Kaimmaṟi-ttal* is, according to the TL, lexicalized as "to wave the open hand as a sign of disapproval", but here it rather seems to refer to a sign of approval.

[3] The OC glosses *viḷi-ttal*, normally "to call", with *pāṭu-tal*, "to sing", which seems reasonable in the context.

[4] Peacocks are said to rejoice during the rainy season, therefore they are here said "not to thrive in the heat". For the peacocks dancing in the rain, cf. AiE 29, KārN 16.

[5] For the phrase *vāṭkaṇṇāy*, see the notes to TN 88.

[6] Lit. "the way in which [I] can live, being one who exists".

112. தேரோன் மலைமறையத் தீங்குழல் வெய்தாக
வாரான் விடுவானோ வாட்கண்ணாய்—காரார்
குருந்தொடு முல்லை குலைத்தனகா ணாமும்
விருந்தொடு நிற்றல் விதி.

2b விடுவானோ Irā.; விடுவானோர் A_1, A_2, B*
3a குருந்தொடு A_1, A_2, B; குருந்தோடு Irā.†
3c குலைத்தனகா A_2, B, Irā.; கொலைத்தனகா A_1
4a விருந்தொடு A_1, A_2, B; விருந்தோடு Irā.‡
4c விதி A_2, B, Irā.; வீதி A_1

* Irā.'s emendation *viṭuvāṉō* seems necessary and is supported by the OC.
† The reading in the mss. is ambiguous, but the sociative suffix should be *-oṭu* before consonants.
‡ See above.

எ-து. பருவம் காட்டித் தோழி தலைமகளை வற்புறுத்தியது.

பகலோன் மலையின்கண் மறைய இனிய குழல் இன்னாதாய் வெய்தாக இக் காலத்தின்-கண் வாராதே விடுவானோ. வாட் கண்ணாய்! பசுமை ஆர்ந்த குருந்துடனே முல்லைகள் பூங்கொத்தை ஈன்றன காண். இனி நாமும் அவற்கு[1] விருந்து செய்தல் ஒழுகி நிற்றல் நெறி என்றவாறு.

1 அவற்கு B; அவர்க்கு A_1, Irā.

தேரோன்	மலை	மறையத்	தீம்	குழல்	வெய்து	ஆக
tērōṉ	*malai*	*maṟaiya.t*	*tīm*	*kuḻal*	*veytu*	*āka*
chariot (pron.n. 3.sg.m.)	mountain	to be hidden (inf.)	sweet	flute	hot (3.sg.n.)	to be (inf.)

வாரான்	விடுவானோ	வாள்	கண்ணாய்	கார்	ஆர்
vārāṉ	*viṭuvāṉ-ō*	*vāḷ*	*kaṇṇāy*	*kār*	*ār*
to come (neg. 3.sg.m.)	to let (ip. 3.sg.m.) + *ō*	brightness	eye	rainy season	to be full

குருந்தொடு	முல்லை	குலைத்தன	காண்	நாமும்
kuruntoṭu	*mullai*	*kulaittaṉa*	*kāṇ*	*nām-um*
kuruntu tree (soc.)	jasmine	to grow in clusters (p. 3.pl.n.)	to see (imp.)	we(incl.) + *um*

விருந்தொடு	நிற்றல்	விதி.
viruntoṭu	*niṟṟal*	*viti.*
feast (soc.)	to stand (vb.n.)	rule

Will he fail to come[1] when the chariot rider hides behind the mountain,[2]
and when the flute-play becomes violent?[3] You with bright eyes![4] See, the jasmine,[5]
along with the *kuruntu* tree,[6] which is full in the rains,[7] has produced flower clusters.[8]
That we, too, stand by with a feast, is required.[9]

(The confidante comforting the heroine by showing her the season.)

[1] *Viṭu-tal* seems to be used as a negative auxiliary, either with a negative finite verb, as here (cf. also *pullāṉ viṭiṉē* in Kain. 55), or with a negative absolutive in *-ā* (cf. *vārā viṭuvār* in AiE 23 and *vārā viṭal* in Kain. 26, 35).

[2] "Chariot rider" refers to the sun, who is said to ride a chariot in the sky (cf. TN 80, AiAi 7). For the image of the sun hiding behind a mountain at sunset, cf. TN 69.

[3] For the flute-play afflicting the heroine, see the notes to TN 101.

[4] For the phrase *vāṭ kaṇṇāy*, see the notes to TN 88.

[5] For the jasmine (*mullai*), see the notes to TN 105.

[6] For the *kuruntu* tree, see the notes to TN 93.

[7] The OC glosses *kār*, "rainy season", with *pacumai*, "freshness", which seems uncalled for. This meaning is listed for *kār* in the TL, but only with reference to this passage.

[8] The reference for the meaning "to shoot forth in a bunch" given for *kulai-ttal* in the TL is this passage, but the meaning seems natural (cf. *kulai*, "flower cluster").

[9] I.e. a feast to welcome the hero on his return.

113. பறியோலை மேலொடு கீழா விடையர்
பிறியோலை பேர்த்து விளியாக் கதிப்ப
நரியுளையும் யாமத்துந் தோன்றாரா லன்னாய்
விரியுளைமான் றேர்மேல்கொண் டார்.

4a விரியுளைமான் A_1, A_2, B, Irā.; விரியுளைநன் A_3

எ-து. பருவம் கண்டு அழிந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

